தளபதி

டி கால்

[பிரெஞ்சு சுதந்திர இயக்க ஸ்தாபகர்]

இ. சிவம்

நவயுகப் பிரசுராலயம்
ஜார்ஜ் டவுன், சென்னை

[அணா 4

தளபதி

டி கால்

[பிரெஞ்சு சுதந்திர இயக்க ஸ்தாபகர்]

இ. சிவம்

நவயுகப்பிரசுராலயம்

பதிப்புரிமை] ஜி. டி. சென்னை [அணா 4



பிரெஞ்சுத் தலைநகரான பாரிஸில் பிரதான வீதி

தளபதி டிகால்

1. விமானி மாற்றம்

1940 செப்டம்பர் மாதத்தில் ஒருநாள் விச்சி நகர விமான நிலையம் அல்லோலகல்லோலப்படுகிறது. என்றுமில்லாத பரபரப்பும் சுறுசுறுப்பும் நிரம்பியிருக்கின்றன. விமானத் திடலில் ஒரு பெரிய ராணுவ விமானம் தென்திசை நோக்கியவண்ணம் நிற்கிறது. ஏராளமான உத்தியோகஸ்தர்கள் அங்குமிங்கும் போய்க்கொண்டிருக்கிறார்கள். சிலர் ஆங்காங்கே கூடிக்கூடி ஏதோதோ இரகசியம் பேசுகிறார்கள். நிலைய சிப்பந்திகள் சிலரும் பேசிக்கொள்ளுகிறார்கள். இவற்றையெல்லாம் கவனித்தவர் போல் விமானம் ஓட்டுகிறவர் அந்த ராணுவ விமானத்தில் இடம் பெற்றிருக்கிறார். அவர் தம் பிரயாணத்துக்கு வேண்டிய எல்லாக் கருவிகளையும் தயாராக்கிவிட்டார். விமானத்தையும் நன்றாகப் பரிசோதித்தாகிவிட்டது. போதுமான எண்ணெய் முதலியவையும் இருக்கின்றன. விமானத்தில் செல்ல

வேண்டிய தளபதி **வேகாண்ட்** வரவேண்டியதுதான் தாமதம்; மறு நிமிஷத்தில் அந்த விமானி வானில் எழும்பி விடுவார் போலிருக்கிறது. அப்படிப்பட்ட வேளையில், என்ன காரணமோ, அவர் வெளியே அழைக்கப்பட்டு மற்றொருவர் அவர் இடத்தில் அமர்த்தப்பட்டார். இப்படி விமானியை மாற்றியது ஒரு நொடிக்குள் மிக இரகசியமாக நடைபெற்றுவிட்டது. அதனை யார் யார் கவனித்தார்கள், யார் யார் கவனிக்கவில்லை என்பதை நாம் அறியோம்.

சுமார் ஐந்து நிமிஷமானதும் தளபதி வேகாண்ட் தோன்றினர். அவரைப் பின்தொடர்ந்து பல உத்தியோகஸ்தர்கள் வந்தார்கள். எல்லோரும் வந்தனமும் பிரதி வந்தனமும் செய்து கொண்டார்கள். அடுத்த நிமிஷத்தில், 'தளபதியின் ஆப்பிரிக்க விஜயம் வெற்றி தருக!' என்று அனைவரும் வாழ்த்த, விமானம் தென் திசை நோக்கி மறைந்தது. மறைந்து அரை மணி நேரம் ஆயிற்றோ என்னவோ, விச்சி நகரம் முழுவதும் ஒரு பரிதாபகரமான செய்தி பரவியது. 'ஆப்பிரிகா சென்ற தளபதியின் விமானம் லிமோக் நகரண்டையில் விழுந்துவிட்டது! தளபதியின் விலா எலும்புகளில் இரண்டு முறிந்துவிட்டன. விமானம் குப்பைபோல் உருக்கெட்டு இருக்கிறது!' என்று ஊர் முழுவதும் பேசிக்கொண்டார்கள்

இந்த விமான விபத்து ஏற்பட்டது எவ்வாறு? பறக்குமுன் விமானம் நன்றாகப் பரிசோதித்து உறுதி செய்யப்பட்டிருந்ததே! அன்றியும் அது சக்தி

மிகுந்த விமானம் என்பதிலும் ஆட்சேபமில்லையே! அப்படியிருக்க, அது தவறி விழுந்தது என்றால் அதென்ன மாயம்? ஒருகால் விமானி மாறினாரே, அதில் ஏதேனும் இரகசியம் இருக்குமோ? அல்லது உத்தியோகஸ்தர்கள் இரகசியம் பேசினார்களே, அதில் ஏதாவது சூழ்ச்சி யிருக்குமோ? எதுவும் இப்போது துணிந்து கூறுவதற்கில்லை. துப்பறியும் பெரிய நிபுணர்கள் ஆராய்ந்து சொல்லவேண்டிய விஷயம் அது. அதற்குமுன் இத்தனை குழப்பங்களுக்கும் மூல புருஷராயிருந்தவர் ஒருவர் என்று கூறுவோம். அவர் தாம் தளபதி டி கால் என்ற சுதந்திர பிரெஞ்சு இயக்க ஸ்தாபகர். அவரது முழுப் பெயர் கர்னல் சார்லஸ் ஜோஸப் மேரி டி கால்.

பிரான்ஸ் உலகில் இரண்டாவது ஸ்தானம் வகிக்கும் பெரிய சாம்ராஜ்யத்தை யுடையது. அந்த சாம்ராஜ்யத்தின் எட்டில் ஏழு பாகம் ஆப்பிரிகாவில் இருக்கிறது. அந்தப் பாகத்தில் முக்கியாம்சம் பெற்றது மேற்கு ஆப்பிரிகா. சுமார் மூன்று லட்சம் சதுர மைல் விஸ்தீரணமுடைய மேற்கு ஆப்பிரிகா, ஏழு குடியேற்ற நாடுகளை உட்கொண்டதாகும். அதன் கிழக்கெல்லை எகிப்து; மேற்கெல்லை அத்லாந்திக் மகா சமுத்திரம். அந்தப் பூபாகத்தில் 27,000 ஐரோப்பியரும் சில லட்சம் ஆப்பிரிக்க சுதேசிகளும் வசிக்கிறார்கள். சென்ற சில மாதங்களாக அந்தப் பகுதியில் நாஜியரின் நாட்டம் புகுந்திருப்பதாகப் பேச்சு. டாக்கார் என்பது அங்கே கடற்கரையிலிருக்கும் பெரிய நகரம். பெயர் பெற்ற துறைமுகமுமாகும். அந்தத் துறை

முகத்தில் பலமான ராணுவத் தளத்தை அமைத்துக் கொண்டால் அத்லாந்திக் மகா சமுத்திரத்தில் ஓடும் பிரதான கப்பற் பாதை யொன்றின்மேல் பூர்ண ஆதிக்கம் செலுத்த முடியும். இதனைத் தெரிந்து கொண்ட நாஜியர் டாக்காரில் சேனை நிறுவ முயன்றார்கள். அதற்கு ஏற்றாற்போலச் சில நாஜி விமானிகள் அங்கு பறந்து சென்று, புகைப்படமும் பிடித்தார்கள்.

இந்த உண்மை பிரிட்டனில் பரவியதும், அங்கு ஆங்கிலேயர் சார்பிலிருந்து போராடிவரும் தளபதி டி கால் மிகுந்த ஆத்திரம் கொண்டார். எப்படியும் நாஜிகளுக்கு இடம் கொடாமல் தாம் முன்னாடியே டாக்காரைப் பிடித்துக்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்தார். டாக்காரைப் பிடித்துக்கொண்டால் நாளடைவில் மேற்கு ஆப்பிரிகா முழுவதையுமே தம் வழிப்படுத்திவிடலாம் என்பது அவருடைய அந்தரங்க ஆசை.

இந்த ஆசை ஐந்தாம் படையாக உள்நாட்டில் அமைந்துள்ள நாஜிகளுக்குத் தெரியாமலிருக்குமா? அவர்கள் தற்போதைய பிரெஞ்சுத் தலைநகரான விச்சியிலிருக்கும் பிரெஞ்சு சர்வாதிகாரி பெட்டெய்னிடம் மெதுவாக அறிவித்தார்கள். இதாலியரும்கூட விச்சி சர்க்காரை வற்புறுத்தினர். பெட்டெய்ன் உண்மையில் நாஜிகளிடம் நட்புக்கொண்டவரல்லர். அவர்கள் சொல்லுகிறார்கள் என்பதற்காக மனப்பூர்வமாக எதுவும் செய்யாமலிருக்கப் பிரியப்படுவார். ஆனால் தமக்

குப் போட்டியாக பிரெஞ்சு சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியைத் தம் கைக்குள் வைத்துக்கொண்டிருக்கும் டி கால் டாக்காரில் இடம் பெறுவதை மட்டும் அவர் விரும்பவில்லை. எனவே, செல்வாக்குள்ள ஒரு பிரெஞ்சுத் தலைவரை முன்னுடியே மொராக்கோவுக்கு அனுப்பி, அந்நாட்டையும் டாக்காரையும் இதர பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளையும் அசையாமல் பார்த்துக்கொள்ள நினைத்தார்.

அதற்காக ஒரு தகுந்த தலைவருக்கு வலைவீசப் பட்டது. பல நபர்கள் பரிசோதிக்கப்பட்டார்கள்; ஒருவரும் சரிப்படவில்லை. முடிவில் வேகாண்டை அனுப்புவதென்று நிச்சயித்தார் பெட்டெய்ன். வேகாண்ட் பிரான்ஸில் பேர் பெற்ற வீரர், பெரிய ராணுவ நிபுணர், சிறந்த தேசாபிமானி. சென்ற மகா யுத்தத்திலும் தற்போதைய அமரிலும் பெரிய சேவை செய்தவர். இப்போது அவருக்கு வயது சுமார் 75 ஆனபோதிலும், கூரிய மதியும் சீரிய அரசியலறிவும் நேரிய தேசப்பற்றும் பெற்றிருக்கிறுர். பிரெஞ்சு மக்களிடம் அவருக்கு அபார செல்வாக்கு உண்டு.

பெட்டெய்ன் வேகாண்டைத் தேர்ந்தெடுத்தது நாஜிகளுக்குப் பிடிக்கவில்லை. அவர்களுக்கு வேகாண்டிடம் பெரிய சந்தேகம். சமயம் நேர்ந்தால் அவர் டி காலுடனேயே சேர்ந்துகொண்டு விடுவார் என்று நினைத்தார்கள். ஆகவே மறைமுகமாக அவரை மேற்கு ஆப்பிரிகாவுக்கு அனுப்பாமலிருக்கப் பிரசாரம் செய்தார்கள். அந்தப் பிரசாரம் பெட்டெய்னுக்

குப் பிடிக்கவில்லை. 'வேகாண்ட் ஒருவர்தான் நம்பத் தகுந்த பிரமுகர்' என்று ஒரே யடியாய்க் கூறிவிட் டார். அதன் மேல்தான் முதலில் விவரிக்கப்பட்டிருக் கும் விமான விபத்து ஏற்பட்டது.

இவ்விபத்தும் அதன் பலாபலன்களும் ஒருபுற மிருக்கட்டும். முதலில், டி கால் யார்? பெட் டெய்ன், நாஜியர், இதாலியர் ஆகிய முப்பிரிவினரும் ஒருவரைக் கண்டு ஏகமாகப் பயப்படுகிறார்களே அந்த டி கால் யார்? அவரிடம் என்ன பிரமாதமான சக்தி இருக்கிறது? அவரது வரலாறு என்ன? எப்படி அவர் இங்கிலாந்தை நாடினார்? இவ்விஷயங்களைக் கவனிப்போம்



தளபதி டிகால்

2. போர்ப் பயிற்சி

சுதந்திர பிரான்ஸில் பிறந்து, அடிமை பிரான்ஸை விட்டு நீங்கி, சுயேச்சை பிரான்ஸ் ஒன்றைக் காண்பதற்காகப் போராடி வரும் பிரெஞ்சுத் தளகர்த்தர் டி காால். அவரை ஐரோப்பிய யுத்தமென்னும் எரிமலையின் உடைவிலிருந்து தெறித்து விழுந்த ஒரு செந்தழல் பிழம்பு என்று கூறலாம். அப்பிழம்பு அதிசீக்கிரத்தில் ஆறிவிடும் சாதாரணக் கல்துண்டு என்று சிலர் மதிக்கிறார்கள். வேறு சிலர் மெய்யான மாணிக்கக் கல்லே அப்பிழம்பு என்றும், எரிமலையின் ஜோதி கலந்திருப்பதாலேயே அதிகப் பிரகாசமாய்த் துலங்குகின்றதென்றும் மறுப்புரை தருகிறார்கள். இந்த இருவித உரைகளும் எப்படி யிருந்தாலும் டி காலின் பழஞ் சரித்திரத்தைக் கவனித்தால், அவர் பாக்கியம் பெற்றிலாதவராகவும், குடத்துக்குள் வைத்த விளக்காகவும் தோன்றுகிறார். உலகில் சிலர் தமக்கு உரிமையில்லாத புகழைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள் சிலர் உரிமையுள்ள புகழைப் பெருமலிருக்கிறார்கள். இன்னும் சிலர் புகழுக்குரிய உரிமையைப் பெற்று விடாதபடியே அழுத்தப்பட்டு விடுகிறார்கள். இந்தக் கடைசி இனத்தைச் சேர்ந்தவர் டி கால்.

அவரது வாழ்க்கை எவ்வித விசித்திரங்களும் நிறைந்ததன்று. அவரைப்பற்றி முக்கியமாய்க் குறிப் பிடத் தகுந்தது அவரது அபாரமான போர் ஞான மாகும். போர் முறைகளைப்பற்றிச் சிந்திப்பதும் ஆராய்வதும் அவருக்குப் பொழுதுபோக்கு. சில வருஷங்களுக்கு முன்பு அவர் தம் கையினல் ஒரு சிறு டாங்கைக் கட்டி, அதனைப் படுக்கை யறையில் வைத்து, எங்ஙனம் அதை மகா சக்தி வாய்ந்த இயந் திர பூதமாக்க முடியுமென்று இரவும் பகலும் யோசித்துக் கொண்டிருந்தாராம். சிறு குழந்தையா யிருக்கும்போது தோழர்களைக் கூட்டி நிறுத்தி, கவாத்து முறை பழகி, யுத்தம் செய்து விளையாடு வாராம். இதைக் கண்ட அவர் தந்தை வியந்து, தம் மகன் படிக்கத் தகுந்த கல்விச் சாலை ராணுவப் பள்ளிக்கூடமே என்று தீர்மானித்தாராம். அவ்வி தமே ராணுவக் கல்வி பெற ஏற்பாடு செய்யப்பட் டது. பிரான்ஸில் இகோல் தெ கோர் என்று வழங் கப்படும் பெரிய ராணுவக் கலாசாலை ஒன்று இருக் கிறது. பிற்காலத்தில் இதற்காக டி கால் சில பிரசங் கங்கள் தயாரித்தார். அவற்றைப் பார்த்த ராணுவ நிபுணர்கள் அவை பொன்போல் போற்றத் தகுந்தவை என்கிறுர்கள். அந்தப் பிரசங்கங்களைத் தவிர, டி கால் வேறு மூன்று நூல்களும் வெளியிட்டிருக்கிறுர். அவற்றையும் நடுநிலைமைப் புத்தியுடையோர் பெரி தும் போற்றுகின்றனர். 'பெட்டிட் பரீஸியன்' என்பது பாரிஸ் நகரில் புகழ் பெற்ற ஒரு பத்திரிகை. அதன் ஆசிரியர் இலிபாய். அவர் மிகுந்த செல்வாக்

கும் அறிவும் ஆற்றலுமுடையவர். அவர் டி காலேப் பற்றி எழுதும்போது, 'டி கால் ஒரு மூளையுள்ள வாள்!' என்று குறிப்பிட்டிருக்கிறார். கூர்மையான அறிவும் போர்வன்மையுமுடைய மனிதர் என்பதே இதன் பொருளல்லவா? 'ஈவினிங் போஸ்ட்' என்ற ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியர் டி காலேப் பாராட்டுவதற்காக ஒரு நீண்ட வியாசமே எழுதியிருக்கிறார். அதன் முக்கியமான பாகம் வருமாறு:

'இயந்திர சாதனங்களால் நடத்தப்படும் நவீனப் போரில் டி கால் இணையில்லாத வீரர். விமானங்களின் முக்கியத்தையும், டாங்குகளின் ஆக்ரோஷத்தையும் அவரைப் போல் அறிந்தவர் யாருமில்லே. அவற்றைப்பற்றி அவர் நெடுநாளாகப் பிரசங்கித்தும் எழுதியும் வந்திருக்கிறார். பிரெஞ்சுத் தளகர்த்தர்களுக்குள் மோட்டார்ப் படையின் முக்கியத்வத்தை அனுஷ்டான பூர்வமாகக் காண்பித்தவர் டி கால் ஒருவரே. பெரிய சூறவளிபோல் முன்னேறிக் கொண்டு வந்த ஹிட்லரின் படையை அபிவில்லியில் திணற அடித்து 15-மைல் தூரம் புறமுதுகிட்டு ஓடும்படி துரத்திய பெருமை டி காலேச் சேர்ந்ததாகும். பிரான்ஸை இன்னும் ஆண்மையோடு எதிர் நின்று போர் புரியுமாறு வற்புறுத்திய ராணுவ வீரரில் முக்கியஸ்தர் அவரே. அவர் சொல்லேக் கேவலம் ராணுவ ஞானமில்லாத அரசியல் வாதிகள்தான் கேட்டார்களில்லே.'

இவ்விதம் பெயரும் புகழும் பெற்ற வீரர் டி காலின் பூர்வ சரித்திரம் உலக மக்களுக்குத் தெரிய வேண்டியது அவசியம். அவர் 1890, நவம்பர் 22-ம் தேதி பிறந்தவர். அவரது தந்தை லிலி சர்வ கலாசாலேயின் ஆங்கிலப் பேராசிரியர். அத்தந்தையின் அறிவும்

சாதுரியமும் மகனிடம் பிரதிபலித்திருக்கிறது. டி கால் ஸிர் ராணுவக் கலாசாலேயில் பயின்று உயர்ந்த பட்டம் பெற்றவர்.

டி கால் சுத்தமான பிரெஞ்சு ரத்த முடையவரா யிருந்தும் நிறத்தில் கொஞ்சம் மங்கலானவர். இது ஆழ்ந்த மதியும் மனமும் உடையவர் என்பதற்கு அடையாளம் போலும்! நீர்நிலே மிகவும் ஆழமா யிருந்தால் தோற்றத்தில் சியாமள வர்ணமாக இருக்கு மல்லவா ?

அவர் ஆஜானுபாஹு, கட்டுமஸ்தான சரீர முடையவர். கவியுள்ளம் படைத்தவர்கள் கண்டால், பிரம்மா அவரை ராணுவத்திற்கென்றே சிருஷ்டித் திருக்கிருர் என்பார்கள். இந்த ராணுவ உருவத் திற்கேற்ற ராணுவ மனமும் அவருக்கு இருக்கிறது. எதிரிகள் பகை ஊட்ட ஊட்ட அவருக்கு உத் வேகம் அதிகப்படும். உடம்பில் படும் காயங்களே வீர லட்சுமி மிதித்தேறுவதற்கான படிக்கட்டுகளாக மதிப்பார் அவர். காயம் என்பதற்கு அவரைப் பொறுத்த வரையில் சரீரம் என்பதன்றி வேறு பொருளில்லே.

அவர் டென்னிஸ் விளேயாடுவதில் மகா நிபுணர். இடத்துக்கு இடம் மின்னல்போல் பாய்ந்து நிற்பார். குதிரை சவாரியிலும் அவருக்கு நல்ல பயிற்சி உண்டு. அவருடைய பேச்சு உருவத்தைப் போலவே கம்பீர மாக இருக்கும். அவர் பேசிக்கொண்டே யிருக்கை யில், இடையில் திடீரென்று நிறுத்தி விடுவார். இதற்

குக் காரணம் கேட்டால், 'அவசியமில்லாத காரியங்களுக்காக அதிக வார்த்தைகளைக் கொட்டுவதால் ஆவதென்ன?' என்று வினவுவார். இதேமாதிரி மற்ெறாரு குணம். தமக்குச் சம்பந்தமில்லாத விஷயங்களைப்பற்றிப் பேசமாட்டார். சிலர் இதனை நல்ல குணமல்லவென்று கூறலாம். ஆனால் எல்லோரும் ஏகமாகக் குறை சொல்லும் விஷயம் ஒன்றும் அவரிடம் உண்டு. அவருக்கு வசீகர சக்தி கிடையாது. பிறரிடம் பேசி, அவர்களைத் தம் வழிக்கு இழுத்துக்கொள்ளும் ஆற்றல் பெரும்பாலும் சூனியம். 'ஆனால் சாதாரண மனிதர்களிட மிருக்கும் சீர்கேடுகள் எதுவும் அவரிடமில்லை என்பது பாராட்டத் தகுந்தது' என்று 'நியூஸ் ரிவ்யூ' பத்திரிகை கூறுகிறது.

டி காலுக்கு மூன்று குழந்தைகளுண்டு. இதை எத்தனை பிரெஞ்சுக்காரர்கள் அறிவார்கள் என்பது விளங்கவில்லை. அவருக்கு மனைவி யிருப்பதையே பலர் அறியமாட்டார்கள். அதேமாதிரி அவர் சிரித்த முகத்துட னிருப்பதையும் அநேகர் கண்டிருக்கமாட்டார்கள். இதுகாறும் அவரைப்பற்றி வெளியாகியிருக்கும் படங்கள் ஒன்றிலாவது அவர் சிரித்த முகத்துடன் காணப்படவில்லை. அவரிடம் சிரித்துக் காரியம் சாதிக்கும் குணமும் நயவஞ்சக வேலைகளும் கிடையா. தோற்றத்தைப் பிரமாதப்படுத்திக் காண்பிக்கவும் அவர் ஒருபோதும் பிரியப்படமாட்டார்.

சென்ற மகாயுத்தம் தோன்றியபோது அவருக்கு வயது இருபத்துநான்கு. கல்லூரியைவிட்டு வெளி

வந்து மூன்று வருஷங்கள் கழிந்திருந்தன. ஆயினும், சர்க்கார் கட்டாய ராணுவ சேவை முறையைப் புகுத்தவே அவர் காலாட்படையின் 33-வது ரெஜிமெண்டில் சேர்ந்தார். அப்போது அவருக்கு வழங்கப்பட்ட உத்தியோக அந்தஸ்து லெப்டினெண்டு ஸ்தானம்.

இந்த 33-வது ரெஜிமெண்டைப்பற்றி ஒரு விநோதத்தைக் குறிப்பிடுவது அவசியம். இன்று விச்சி சர்க்காரின் தலைவராகவும், டி காலின் பரம எதிரியாகவும் விளங்குகிருரே அதே பெட்டெய்ன்தான் அப்படையின் சேனுபதி.

யுத்தத்தில் டி கால் வெகு திறமையாகக் கடமையாற்றினுர். அவரது இயற்கையான போர்த்திறம் நன்ருக வெளிப்பட்டது. அதன் பயனுய் ஒருநாள் (1914 ஆகஸ்ட் 15-ந்தேதி) அவருக்குக் காயம் பட்டது. இரண்டு மாதம் சென்றபின் அவரது திறமையைப் பாராட்டி, அவரை ஒரு பட்டாளத் தொகுதிக்குத் தலைவராக்கினுர்கள் அதிலும் அவர் சாமர்த்தியமாக நடந்துகொண்டார். துரதிர்ஷ்டவசமாக அப்போதும் ஒரு காயம் ஏற்பட்டது. சர்க்கார் அவரைப் பாராட்டி, போர் மரியாதைச் சிலுவை ஒன்றை வெகுமதியாக அளித்தார்கள். அப்பால் வெர்டூன் போரில் ஈடுபட்டார். வெர்டூன்தான் பெட்டெய்னுக்குப் பேரும் புகழும் அளித்த இடம். வெர்டூன் போர் சரித்திரப் பிரசித்தமானது. அதில் டி கால் அபாரமாகப் போராடினுர். அப்போது மூன்ருவது

முறையாக அவருக்குக் காயம் ஏற்பட்டது. அந்தக் காயம் முந்தியவற்றைப்போல் இருக்கவில்லை. அவர் போர்க்களத்தை விட்டுத் தப்பித்துக்கொள்ள எவ்வளவோ முயன்றும் பயனில்லாமற் போயிற்று. அத்துடன் எதிரிகளிடம் கைதியாகவும் மாட்டிக்கொண்டார். இது நடந்த வருஷம் 1916.

அப்பால் யுத்த சமாதானம் ஏற்பட்டதும், அவர் ஜெர்மன் சிறையிலிருந்து மீண்டு பிரான்ஸுக்கு வந்தார். அவரைப் பெட்டெய்ன் மறக்கவில்லை. டி கால் எவ்வளவு திறமையாகப் போராடினார் என்பதை ஞாபகத்தில் வைத்திருந்தார். எனவே காலதாமதமின்றி அவரைத் தம் மெய்காப்பாளராக நியமித்துக் கொண்டார்.

இவ்வாறு டி காலுக்கு பெட்டெய்னின் கீழிருந்து உழைத்து அனுபவம் ஏற்பட்டது போலவே, அவருடைய மற்றொரு எதிரியான வேகாண்டின் கீழிருந்து போராடிய பரிசயமும் ஏற்பட்டது. 1920-ல் போலந்தில் போல்ஷிவிக் யுத்தம் பேராரவாரத்துடன் நடந்தது. அதனை அடக்கி அமைதி நிலைநாட்டுவதற்காக வேகாண்ட் அனுப்பப்பட்டார். அப்போது டி காலும் கூடச் செல்ல வேண்டியதாயிற்று. இருவருமாக வெகு திறமையுடன் போல்ஷிவிக்கர்களை அடக்கினர். அடக்கிய பின் சில மாதங்கள் அங்கே தங்கி, பூரண அமைதி கண்ட பிறகுதான் வெளியேறினார்கள். டி கால் போலந்தில் யுத்த சேவை செய்தது மொத்தம் ஒன்றரை வருஷம்.



மேற்கு ஆப்பிரிகாவில் விச்சி சர்க்காரின்
பிரதிநிதியா யிருக்கும்
தளபதி வேகாண்ட்



நாஜி - பிரெஞ்சு யுத்தத்தின்போது
பிரெஞ்சுச் சேனையைத் தலைமை வகித்து நடத்திய
சேனாபதி காமலின்

[அருகே ஹாட் வைத்துக்கொண்டு நிற்பவர் ஓர் ஆங்கில தளகர்த்தர்]

3. ராணுவ ஆராய்ச்சி

போலந்திலிருந்து வெற்றி மாலை சூடித் தாய் நாடு திரும்பிய டி காலுக்கு முன்பு அவர் படித்துவந்த ராணுவக் கலாசாலையில் ஆசிரியர் பதவி கொடுத்தார்கள். அங்கு வேலை பார்ப்பது மெய்யான ராணுவ வீரருக்கு உற்சாகமும் ஊக்கமும் அளிப்பதாகும்.

ஸிர் கலாசாலையில் கிடைத்த பதவிதான் டி காலின் வாழ்க்கையில் முக்கியமான ராஜபாதை. அங்கு அவர் ஏற்கெனவே தாம் பல யுத்தங்களில் பெற்ற அனுபவத்தை யெல்லாம் கோர்வைப்படுத்தி ஆராய்ச்சி நடத்தலானார். அவருக்கு நெப்போலியனின் போர் முறையில் பெரிய மோகம். நெப்போலியன் ஒரு முறை, 'எந்தத் தளகர்த்தன் தன் சேனா பலம் முழுவதையும் ஒன்று திரட்டி ஒரு குறிப்பிட்ட இடத்தில் திடீரெனப் பிரயோகிக்கின்றானோ அவனே வெற்றி பெற்றவனாவான்'* என்று சொன்னார். அச்சொற்கள் டி காலின் மனத்தைக் கவர்ந்தன. அவர் நெப்போலியனின் அப் பொன் உரையை அஸ்திவாரமாக வைத்துக்கொண்டு, தம் அனுபவமாகிய செங்கல்களை அடுக்கிச் சுவர் எழுப்பி, தம் புத்தி

* இதுதான் பிளிட்ஸ்கிரீக் என்ற மின் - யுத்தத்தின் அந்தரங்கம்.

சாலித்தனமாகிய வர்ணத்தைப் பூசி, இயற்கை வாசனையாகிய கூரையை வேய்ந்து ஓர் அழகான கட்டிடம் கட்டலானார். அக்கட்டிடம்தான் அவரது புதிய போர் முறைகள்.

இம்முறைகள் புத்தகமாக வெளிவந்தன. அத்துடன் குறிப்பிட்ட மூன்று சமயங்களில் பிரெஞ்சு சர்க்காரின் காதுகளிலும், அவசியம் கருதி, இவை ஓதப்பட்டிருக்கின்றன. அம்மூன்று காலங்களும் முறையே 1932, 1934, 1939 ஆகிய வருஷங்களாகும். அந்த வருஷங்கள்தாம் ஹிட்லர் வாழ்வில் முக்கியத்துவம் பெற்றவை. 1932-ல் ஹிட்லர் ஆட்சி தோன்றி ஒரு வருஷம் பூர்த்தி பெற்றிருந்தது. 1934-ல் அவர் சர்வாதிகாரியானார். 1939-ல் அவர் போர் ஆரம்பித்தார். இந்த மூன்று காலங்களிலும் டி காலின் தீர்க்கதரிசன உள்ளம் கொந்தளித்தது. அவர் பிரெஞ்சு அரசாங்கத் தலைவர்களிடம் தம் கருத்தை வெளியிட்டார். கலிபிடித்த அவர்கள் செவிடர்களாகி விட்டார்கள். டி காலின் உன்னத உபதேசம் கல்லின் மேலிட்ட கலமாயிற்று. என் செய்யலாம்? ஏகாதிபத்யத் திமிரால் கொழுத்த பிரான்ஸ் பின்னால் தனக்குரிய தண்டனையைப் பெற வேண்டாமோ?

இவ்விடத்தில் டி காலுக்கும் அவரை அரவணைத்துச் சேர்த்துக்கொண்டிருக்கும் பிரிட்டிஷ் முதன் மந்திரி சர்ச்சிலுக்கும் இருக்கும் ஓர் ஒற்றுமையைக் கூறுவது பொருந்தும். இருவரும் உரிய காலங்களில்

தத்தம் தாய்நாட்டுக்கு நல்லறிவூட்ட, அதனை அரசாங்கத் தலைவர்கள் ஏற்றுக்கொள்ளாது இருந்திருக்கிறார்கள். சர்ச்சில் பல வருஷங்களுக்கு முன்னரே தீர்க்கதரிசனத்தால், பெர்லின் என்னும் வான் உச்சியில் ஹிட்லராகிய தூமகேது தோற்றியிருப்பதையும், அதனால் உலகுக்கு ஏற்படப்போகும் தீமைகளையும் கண்டுபிடித்தார். அதனைப் பார்லிமெண்டு முன்னால் பன்முறை வெளியிட்டார். அக்காலத்து மந்திரிமார்கள் கவனிக்கவில்லை. பிறகு தூமகேதுவின் ஆர்ப்பாட்டம் மலையாகத் திரண்டு வீட்டு வாசலில் உருள ஆரம்பித்ததும் சர்ச்சிலையே துணைக்கு இழுத்தார்கள். இதேமாதிரி டி காலும் பன்முறை பிரெஞ்சுத் தலைவர்களிடம் எச்சரிக்கை செய்தும் அவர்கள் கண் திறந்தார்களில்லை.

பிரெஞ்சுத் தலைவர்களைப்போல் எல்லோரும் கண்மூடிக்கொண்டிருந்தனரா? இல்லை. கலிபிடியாத சில புஷ்கரர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு டி கால் உபதேசத்தின் மதிப்பும் மாற்றும் புலப்பட்டன. அப்படிப்பட்டவர்களில் முக்கியமானவர் ஒரு ஜெர்மானியர். குடோரியன் என்பது அவர் பெயர். அவர் டி காலின் நூல்களைப் படிக்கப் படிக்க அவற்றில் விஜயலட்சுமி கொலுவீற்றிருப்பதைக் காணலானார். உடனே மெதுவாக அவர் தம்மையே டி கால் என்று சங்கற்பித்துக்கொண்டு, தம் பாஷையில் மொழி பெயர்த்து, தம் பெயரால் அச்சிட்டுக்கொள்ளலானார். உண்மை தெரியாத நாஜி பொதுஜனங்கள் குடோரியனையும் அவரது நூலையும் பிரமாதமாய்ப் போற்றி

வருகிறார்கள். அதோடு நில்லாது எழுத்தெழுத்தாய் யுத்தகளத்திலும் அந்நூலையே பின்பற்றி வருகிறார்கள். சொந்தநாட்டார் புத்தியில் ஏறாத டி காலின் யுத்த முறை பகை நாட்டாருக்குப் பயன்பட்டுவிட்டது.

டி கால் கண்டுபிடித்து உபதேசித்த சில ராணுவ நுட்பங்கள் அவரது நூல் ஒன்றிலிருந்து எடுத்துக் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன. சமீபத்தில் நடந்த ஜெர்மன் - பிரெஞ்சு யுத்த நிகழ்ச்சிகளோடு அவற்றை ஒப்பிட்டுப் பார்த்தால் அவர் எவ்வளவு பெரிய ராணுவ தீர்க்கதரிசி என்பது புலனாகும்:

'இனிமேல் நடக்கப்போகும் யுத்தம் பழைய யுத்தங்களைப் போல் இருக்காது. முற்றிலும் 'காட்டர்பில்லர்' என்ற இயந்திர வண்டி மயமாகவே யிருக்கும். ஆயுதங்கள் மலைகளின் உச்சிக்கோ பள்ளத்தாக்குகளின் அடிப்புறத்துக்கோ சிரமமில்லாமல் கொண்டுபோகப்படும். துப்பாக்கி சுமப்பதும், உணவு அளிப்பதும், வெடிமருந்து வழங்குவதும் எல்லாம் இயந்திர வண்டிகளாலேயே செய்யப்படும். இவ்வித வசதிகளைப் பெறும் சேனை இரவு ஓரிடத்தில் காணப்பட்டால் பொழுது புலரும் போது 50 மைலுக்கு அப்பாலுள்ள மற்றோரிடத்தில் காணப் படும்.

'இயந்திர வசதி மிகுவதால் போர் வீரர்களுக்குச் சமர் செய்யும் துணிச்சல் அதிகரிக்க வழியுண்டு. அவர்கள் குதிரைகளையோ குதிரைப் படை வியூகங்களையோ பொருட்படுத்தப் போவதில்லை. நெருப்பு உமிழ்தல், மறைந்து நின்று பாய்தல், திடீர் திடீரெனத் தோன்றி யுத்தம் செய்தல், ஒலியாலும் வேகத்தாலும் மாயம் செய்தல் என்பவையே எதிர்கால யுத்தங்களின் முக்கிய லட்சணங்கள். இவ்வித யுத்தத்தில் பிரதம

ஸ்தானம் வகிப்பவை டாங்குகளா யிருக்கலாம். சுமாராக ஒரு போர்க்களத்தில் 2000 டாங்குகள் வரையிலும் தோன்று மானல் அது வியப்பில்லை.'

இங்ஙனம் கூறிய டி கால் தம் தாய்நாட்டுச் சேனையை இயந்திர மயமாக்கும்படி எவ்வளவோ பாடுபட்டார். ஆனல் வெற்றி கிடைக்கவில்லை. அந்தத் தோல்வியின் பயன் ஹிட்லர் படையெடுப்பின்போது நன்ருகத் தெரிந்துவிட்டது. வெறும் டாங்குகளும் விமானங்களும் கொண்டதே அவர் படை. அந்த இயந்திரங்கள் டி கால் கூறியதுபோல், வாயு வேக மாகப் பறந்து வந்தன. எந்த ஆற்றையும், பள் ளத்தையும், குன்றையும் அவை பொருட்படுத்த வில்லை. போதாக் குறைக்குப் பெரும் பெரும் டாங்கு கள் பகுதி பகுதிகளாய்க் கொண்டுவரப்பட்டு, பிரான் ஸிலேயே ஒன்று சேர்க்கப்பட்டன.

டி கால் சொன்ன மற்ருெரு தீர்க்கதரிசனமும் இங்கு குறிப்பிடத் தகுந்தது.

'நமது தேசத்தின் வட கிழக்கு மூலை அபாயகரமானது. மோஸல் குன்றுகளும் மியூஸ் மலைகளும் எதிரிகளுக்குப் பெரும் முட்டுக்கட்டைகளாக உயர்ந்து நிற்பது உண்மை. அவற்றைக் கடந்து பிரான்ஸுக்குள் நுழைவது கஷ்டமே. ஆனல் நாம் சற்றுவது அலட்சியமா யிருந்தால், எதிரிகளுக்கு முட்டுக்கட்டையாக இருக்கக்கூடிய அவை நம்மை நோக்கித் திரும்பிவிடும். அப்படியானல் நம் படை ஹெய்னுட், பிளாண் டர்ஸ் ஆகிய இடங்களின் வழியாகத்தான் தப்ப முடியும். அது மிகவும் தொந்தரவான காரியம்.'

இவ்வாறு எழுதினர் டி காால். இந்த எழுத்து எவ்வளவு நிஜமான தீர்க்கதரிசனம் என்பது சமீபத்தில் 1940 மே மாதம் முதல் 45 நாள் நடந்த நாஜி-பிரெஞ்சுப் போரில் நன்ருகப் புலப்பட்டுவிட்டது. ஜெர்மானியர் மியூஸ், மோஸல் குன்றுகளையும் அவற்றின் சமீபம் புதிதாகக் கட்டப்பட்டிருந்த மஷீனே *அரண் தொடர்ச்சிகளையும் துளைத்துக்கொண்டுதான் பிரான்ஸுக்குள் நுழைந்தார்கள்.' டி கால் எதிர்பார்த்தபடி பிரெஞ்சுத் தளகர்த்தர்கள் அலட்சியமாகவும் இருந்துவிட்டார்கள். அப்பால் பிரெஞ்சுச் சேனை பிளாண்டர்ஸில் பட்டபாடு உலகறிந்த சமாசாரம்.

பிரெஞ்சுக்காரர்கள் பலர் தம் மஷீனே அரணைப் பற்றி என்னென்னவோ கதை பேசுவது வழக்கம். 60 கோடி பவுன் செலவில் கட்டப்பட்ட அக் கோட்டையால் ஜெர்மானியரை அடியோடு நசுக்கிவிட முடியும் என்று நினைத்தோர் பலர். அப்படி நினைத்தவர்களுள் தளகர்த்தர் காமலின் முதன்மையானவர். அவர் அடிக்கடி மஷீனே அரணின் புகழைப் பாடுவாராம். இது டி காலுக்குப் பிடிக்காது. போரின் மெய்யான உயிர் நிலை எங்கிருக்கிறது என்பது டி காலுக்குத் தெரியும். ஆதலால் தற்போதைய உலக யுத்தம் ஆரம்பமானதும் காமலினுக்கு அவர் ஓர் எச்சரிக்கை விடுத்தார். அதைக் கீழே கொடுத்திருக்கிருேம் :

'ஜெர்மானியர் போலந்தில் தம் போர் முறையைக் காண்பித்து விட்டார்கள். அந்தப் போர் முறைகள் போலந்தைப்

---

* Maginot Line

படுநாசம் செய்திருக்கின்றன. அதைப் பார்த்து நாம் ஒரு நல்ல பாடத்தைப் படித்துக்கொள்ள வேண்டும். சைலீஷியாவிலும், பொமெரேனியாவிலும் அவர்கள் கையாண்ட வியூகங்களை ஏன் நம் நாட்டிலும் கையாளமாட்டார்கள்? அவர்கள் பெற்ற வெற்றி அவர்களுக்கு ஒரு தூண்டுகோலாகும். ஆகவே அவர்கள் போகும் எல்லா இடங்களிலும் புதிய போர் முறையும் போகும் என்று நினைக்கலாம்.

'ஜெர்மன் மோட்டார்ப் படை இன்னும் பன்மடங்கு அபிவிருத்தி செய்யப்படலாம். செலவுக்காக நாஜியர் தயங்குவார்கள் என்று நான் நினைக்கவில்லை.'

இதுதான் டி கால் எழுதிய கடிதத்தின் முக்கியப் பகுதி. காமலின் இதைப் பெற்றதும் அலட்சியமாகக் குப்பைக் கூடைக்குள் வீசிவிட்டார். வீசும் போது அவருடைய வாய், 'அதிகப் பிரசங்கி!' என்று ஆத்திரத்தோடு கூறியதாம். அவர் மஷீனோ - வெறி பிடித்தவர் அல்லவா!

காமலின் மட்டிலுமன்று, டி காலின் சொற்களை அலட்சியம் செய்தோரில் பல பெரிய பிரெஞ்சுத் தலைவர்களும் உண்டு. அவர்களில் சிலர் டி காலை 'வஞ்சகன்' என்றும் 'அரசியல் சூழ்ச்சிக்காரன்' என்றும் கூடப் பழித்தார்கள். இவ்வாறு டி காலைச் 'சூழ்ச்சிக்காரன்' என்று சொல்ல ஒரு காரணம் உண்டு. 1931-ம் வருஷம் ரெய்னுடு என்பவர் வெறும் பார்லிமெண்டு உறுப்பினராயிருந்தபோது அவரிடம் டி கால் சில யோசனைகள் கூறியிருந்தார். ரெய்னுடு மெய்யாகவே டி கால்மீது மதிப்புடையவர். மஷீனோவைப் பற்றிய மயக்கமும் அவருக்குக் கிடையாது.

அவர் டி கால் வார்த்தைகளைக் கேட்டுவிட்டு, பார்லிமெண்டில் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தார். அச்சட்டம் தேசத்தின் மோட்டார்ப் படையைப் பெருக்க வேண்டுமென்றும், ஆயுதத் தொழிற்சாலைகளை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்றும், ராணுவத்திற்கு அதிக இயந்திர வசதி அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டது. அதோடு மறைமுகமாக, மஷீனோ அரணில் வீணாகக் குவிந்து கிடக்கும் சோல்ஜர்களைப் பிரயோஜனமான வழியில் உபயோகப்படுத்துவது பற்றியும் வற்புறுத்தியது. அந்தக் காலத்தில் மஷீனோ அரணில் ஏராளமான பிரெஞ்சு யுவர்கள் கூடிக்கிடந்தார்கள். எவ்வித வேலையுமில்லாதிருந்த அவர்கள் நாளடைவில் போர் வன்மையை இழந்துவிடுவார்கள் என்பது டி காலின் அபிப்பிராயம். இது எவ்வளவு தூரம் மெய்யாகியது என்பதை 1940 ஜூன் 20-ந் தேதி ஜெர்மன் — பிரெஞ்சு ஒப்பந்தத்தின்போது பெட்டெய்ன் சொன்ன சொற்களிலிருந்து கண்டுகொள்ளலாம். யுத்த முடிவைப் பற்றிப் பேசுகையில், பெட்டெய்ன் ‘நம் ஜனங்கள் சுகபோகங்களில் மூழ்கி, போர் வேகமற்ற அசக்தராகி விட்டார்கள். அது நாம் சமாதானம் பேசவேண்டியதற்கு ஒரு முக்கிய காரணமாகும்’ என்று குறிப்பிட்டார்.

டி கால் சதா உத்தமமான திருத்தங்களையும் உயர் தரமான யோசனைகளையும் வெளியிட்டுக் கொண்டிருக்கவே, சில பிரெஞ்சு அரசியல் தலைவர்கள்

ரொம்பச் சங்கடப்படலானார்கள். சிலர் அவரை அழுத்திவைத்துவிட முயன்றார்கள். அதுவும் வியர்த்த மாயிற்று. கடைசியில் ஏதேனும் பதவி கொடுத்துச் சாந்தப்படுத்துவதென நிச்சயித்து, அவரைத் தேசப் பாதுகாப்புக் கழகத்தின் காரியதரிசி யாக்கினார்கள். அதே சமயம் அவரையே 57-வது டாங்குப் படையின் தலைவராகவும் நியமித்தார்கள். இந்தப் பெரிய பதவிகளைத் தாங்கு முன்னர் (1929-ல்) டி கால் ஒரு முறை கீழ் நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்து அங்குள்ள நிலைமையைத் தெரிந்துகொண்டார் என்று சொல்லப்படுவதுண்டு. இராக், ஈரான், எகிப்து ஆகிய நாடுகள்தாம் அவர் விசேஷமாகப் பார்வை யிட்டவைகளாம். இந்நாடுகளோடு அவர் என்ன விதமாக உறவு அல்லது மனப்பான்மை வைத்திருக்கிறார் என்பது பிற்காலத்தில் பார்த்து எழுதவேண்டுவதே.

அவர் டாங்குப் படையின் தலைவரா யிருக்கும் போதுதான் மாதிரி டாங்கு ஒன்றைக் கட்டி, தம் படுக்கை யறையில் வைத்து ஆராய்ச்சி நடத்தினர் என்று மேலே கூறினோம். இதனல் தமக்குக் கிடைத்த தலைமைப் பதவியை அவர் எவ்வளவு தூரம் கவலையுடன் ஏற்று நடத்தினர் என்று யூகித்துக்கொள்ள முடிகிறது.

தற்போதைய மகா யுத்தம் ஆரம்பித்ததும் டி காலின் தேவை அதிகமாக உணரப்பட்டது. மேலும், முதன் மந்திரி ரெய்னுடு டி காலிடம் பிரேமை கொண்டவர். எனவே டி கால் 5-வது சேனையிலுள்ள டாங்

குப் படையின் பொதுத் தளகர்த்தராய் நியமிக்கப் பட்டார். பிரெஞ்சு டாங்குப் படை எத்தகைய லட்சண முடையது என்பதை அவர் ஏற்கெனவே நன்ருக உணர்வார் அல்லவா? ஆதலால், 'பெரிய டாங்குகள் வேண்டும். சீர்திருத்திய டாங்குகள் வேண்டும்' என்று கூறத் தொடங்கினர். ஒரு சந்தர்ப் பத்தில், '100 டன் டாங்குகள் சிலவற்றைச் செய்து செய்து கொடுங்கள். மஷீனே அரணைக் காப் பாற்றுவதோடு, எதிர் நிற்கும் ஸீக்பிரீட்* அரணைச் சின்னு பின்னப்படுத்தியும் விடுகிறேன்' என்று முழங்கினர். இம்முழக்கத்திற்குத் தகுந்த பதிலெது வும் கிடைக்கவில்லை. மாகினுட்டின் மகிமை யில் 'சொக்கி'யிருக்கும் தேசத் தலைவர்கள் டி கால் வார்த்தையைப் பொருட்படுத்துவார்களா? அவர் கள் 100 டன் டாங்குக்குப் பதில் மிக நெருக் கடியான யுத்த நிலைமை ஏற்பட்டபோது, 1940 மே 13-ந் தேதி, டி காலை நாலாவது இயந்திரப் படையின் தலைவராய் நியமித்தார்கள். காலத்தை யெல்லாம் வீணுக்கிவிட்டு, சாகும்பொழுது 'சங்கரா சங்கரா!' என்ருல் என்ன பயன்? கவனிக்கவேண் டிய சந்தர்ப்பங்களில் மௌனிகளா யிருந்தவர் கள், அப்புறம் டி காலின் காலைப் பிடித்தால் அவர் தான் என்ன செய்ய முடியும்? என்ருலும் பிறவி வீரரான டி கால் கீழ்த்தரமான தம் சேனையை வைத் துக்கொண்டு லவோன் (Laon) என்ற இடத்தில் ஆண்மையுடன் போராடினர். வாயுவேக மனோவேக

* Siegfried

மாய் எழுந்து புரண்டு வந்த ஜெர்மன் சேனுசமுத்திரம் நான்கு நாள் திணறியது. பின்பு டி கால் அபிவில்லியில் அமர் தொடங்கி, அங்கும் ஆர்ப்பாட்டம் செய்தார். அதிலும் நாஜி ராணுவ சமுத்திரம் கலங்கியது. சில மணி நேரத்திற்குள் நாஜிச் சேனை 15 மைல் பின்னேக்கி ஓடவேண்டியதாயிற்று என்றல், டி காலின் போர்த் திறமைக்கு வேறு எடுத்துக் காட்டு வேண்டுமா ?

1940 மே முதல் வாரக் கடைசியில் ஆரம்பித்த நாஜி - பிரெஞ்சு யுத்தம் மொத்தம் நடைபெற்ற நாட்கள் 45. இந்த 45 நாட்களும் பிரெஞ்சு சரித்திரத்திலேயே மகா பயங்கரமான நாட்கள் என்று சொல்லப்படுகிறது. பெல்ஜியத்தின் எல்லைப்புறத்திலுள்ள நூதன மஷீனே கோட்டையை உடைத்துக் கொண்டு உள்நுழைந்த நாஜிச் சேனை விருவிரென்று வட பிரான்ஸையும் மேற்கு பிரான்ஸையும் பிடித்துக்கொண்டு, பாரிஸ் வரையிலும் வந்துவிட்டது அதற்குள் பிரெஞ்சு மக்கள் அடைந்த துன்பமும் திகைப்பும், நஷ்டமும் கஷ்டமும் கொஞ்சமல்ல. பிரான்ஸில் சமீபத்தில் வெளியான ஒரு புத்தகத்தால், உயர்ந்த அந்தஸ்துள்ள தளகர்த்தர்களில் 9 பேர் உயிரிழந்தார்கள் என்றும், 130 பேர் கைதியானர்கள் என்றும், 75 பேர் காயமுண்டார்கள் என்றும், 40,000 ராணுவ உத்தியோகஸ்தர்கள் இறந்தோ காணுமலோ போய்விட்டார்களென்றும் தெரிகிறது. அமெரிக்காவின் பிரபல பத்திரிகையான

'நியூயார்க் டைம்ஸ்' மற்றொரு கணக்கைத் தருகிறது. அதில் பிரெஞ்சு - நாஜியப் போர் ஆரம்பித்து சுமார் பத்து மாதங்களில் ஏற்பட்ட நஷ்டம் முழுவதும் விளக்கப்பட்டிருக்கிறது. அதன் சாரம் வருமாறு:

'மொத்தம் உயிரிழந்த பிரெஞ்சு சிப்பாய்கள்—80,000 பேர்
காயமுண்டோர் — ஒரு லட்சம் பேர்
கைதியானோர் — 20 லட்சம் பேர்.

இவர்களைத் தவிர, பல சேனைகளின் தளவாடங்களும், சில சேனைகளுமே ஜெர்மனிக்குச் சொந்தமாயின.

இவற்றையும் தவிர, மற்றொரு நஷ்டம். பெட்டெய்னும் நாஜிகளும் 1940 ஜுன் 22-ந்தேதி சமாதான உடன்படிக்கை ஒன்று செய்துகொண்டார்கள். அதன் பிரகாரம் பிரான்ஸ் விச்சி - பிரான்ஸ் அல்லது பிடிபடாத பிரான்ஸ் என்றும் நாஜி பிரான்ஸ் அல்லது பிடிபட்ட பிரான்ஸ் என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. அப்பிரிவுகளில் முந்தியதில் பிரான்ஸில் ஐந்தில் இரண்டு பாகமும், பிந்தியதில் ஐந்தில் மூன்று பாகமும் அடங்கியிருக்கின்றன. நாஜி பிரான்ஸில் அவர்கள் (இந்த மகாயுத்தம் முடியும் வரையிலும்) ஒரு பெரிய சேனையை வைத்துக் கொள்வதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு வருஷமொன்றுக்கு 10,000 கோடி பிராங்க்* செலவாகுமாம். அந்தப் பிரமாண்டமான தொகை முழுவதையும் தவறாது கொடுக்க வேண்டும் விச்சி சர்க்கார்!'

அதிலிருந்து நாஜியர் உழக்கிய 45 நாளையப் போர் எவ்வளவு உக்கிரமாகவும் ஆக்ரோஷத்துடனும் நடந்திருக்குமென்று வாசகர்கள் யூகித்துக் கொள்ள

*பிராங்க் என்பது ஒரு பிரெஞ்சு வெள்ளி நாணயம்-சுமார் 9½ அணா மதிப்புள்ளது.

லாம். ஆனால் டி காலோ கொஞ்சமும் அஞ்சவில்லை. அவர் வேங்கை மாதிரி, பகைவர் அழுத்த அழுத்த, அதிக வீரமும் வேகமும் கொண்டார். அதுபோல் ஆவேசம் கொள்ளலானார் முதன் மந்திரியான ரெய்னுடும். கடைசி வரையிலும் போர் செய்வதென்றும் ஒருகால் நாஜியர் பிரான்ஸைப் பிடுங்கிக்கொண்டால், ஆப்பிரிகாவிலிருந்து யுத்தத்தை நடத்தவேண்டுமென்றும் உறுதி கூறினர். அத்தகையவர்தாம் புதிதாய் ஒரு மந்திரி சபை நிறுவி, அதில் டி காலுக்குத் தற்காப்பு மந்திரிப் பதவி நல்கினர். துரதிர்ஷ்டவசமாக அப்பதவி நான்கு நாள் கூட நீடிக்கவில்லை. நான்கு நாட்களுக்குள் பிரான்ஸில் எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட, ரெய்னுடு ஸ்தானம் விட்டு நீங்கவும் யுத்த மந்திரியாயிருந்த பெட்டெய்ன் முதன் மந்திரியாகவும் ஏற்பட்டது. அவரோடு பதுங்கியிருந்த பிளாண்டினும் லவாலும் வேலை செய்யலானார்கள். அவர்களுடைய வேலையைச் சூழ்ச்சி என்றே சொல்லலாம். நாஜிகளுக்கு அடங்கிச் சமாதானம் செய்யவில்லையானால் பிரான்ஸ் அளவற்ற நஷ்டத்துக்கு இடமாவதோடு, பாரிஸ் நகரத்துக் கலைப் பொக்கிஷங்கள் காலனுக்கிரையாகி விடுமென்று பிரசாரம் செய்யலானார்கள். அதிகம் ஏன்? பெட்டெய்ன் பெயரால் பிரான்ஸ் அடிமைப்பட்டுவிட்டது.

அதன்பின் நடந்த நிகழ்ச்சிகள் நாஜிகளின் முன்னேற்றத்தைவிட அதிகவேகமுடையனவாகும். ஜூன் 22-ந்தேதி சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டபோது

பிரெஞ்சு சர்க்கார் போர்டோவி லிருந்தது. 30-ந் தேதி அந்த சர்க்காரைக் கிளெர்மெண்ட்-பெர்ரண்ட் என்ற இடத்துக்கு மாற்றினர்கள். ஜூலை 1-ந் தேதி அது இன்னும் சற்று தூரத்திலுள்ள விச்சி நகருக்கு மாற்றப்பட்டது. இதற்குள் ஜூன் 25-ந் தேதியைத் துக்க நாளாகப் பாவித்துப் பிரெஞ்சு மக்கள் தங்கள் தேசம் அடிமைப்பட்டதற்காக வருந்தினர்கள். அந்த வேளையில் பழைய பிரமுகர்களாயிருந்த டலாடியரும் லெப்ரனும் இருந்த இடம் தெரியாமல் ஓடி ஒளியத் தொடங்கினர்கள்.

பதிலுக்கு, அடங்கிக் கிடந்த லவால் தலைதூக்க லானர். ரெய்னடு ஒரு மோட்டார் விபத்துக்காளாகி வழியில் விழுந்தார். பிளாண்டினின் பெயர் தலை யெடுத்தது. எங்கும் சாந்தமும் கொந்தளிப்பும் விர வத் தொடங்கின. அந்த வேளையில் போரில் உயிரிழக் காது எஞ்சியிருந்த பார்லிமெண்டு மெம்பர்கள் ஒன்றுகூடி, அதுகாறும் இருந்த பிரெஞ்சுக் குடியாட் சியை நீக்கி வைத்துவிட்டு, தாற்காலிக சர்வாதிகார ஆட்சி யொன்றை நிறுவினர்கள். அதன் தலைவர் தான் பிலிப் பெட்டெய்ன்.

பெட்டெய்ன் 84 வயதான ஒரு வயோதிகர். ஆனல் மிகுந்த செல்வாக்குடையவர். 1922 முதல் 1931 வரையிலும் அவர் பிரெஞ்சுச் சேனையின் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருந்தார். அதன் பின் ஸ்பெயினில் பிரெஞ்சுப் பிரதிநிதியாக இருந்தார். அதுபோது ஸ்பெயின் சர்வாதிகாரியான பிராங்கோ

வுக்கும் இவருக்கும் நெருங்கிய நட்பு ஏற்பட்டது. அந்த நட்பின் பயனுகத்தான் நாஜிப் படைகள் பாரிஸை நெருங்கியதும், பிராங்கோ இடையில் புகுந்து, சமாதானம் பேசினுர்.

டி கால் தற்காப்பு மந்திரியாயிருந்த 4 நாளைக் குள்ளேயே இரண்டு தடவை லண்டனுக்குச் சென்று திரும்பினுர். பிரதமர் சர்ச்சிலும் பெட்டெய்னும் பற் பல சீர்திருத்தங்களைப்பற்றிப் பேசிக்கொண்டார்கள். பலவித ராணுவ வியூகங்களும் சர்ச்சை செய்யப்பட் டன. பிரான்ஸையும் பிரிட்டனையும் ஒரே சர்க்கா ரின் கீழ்க் கொணர்ந்து நாஜியத்தை வேரறுக்க வேண்டுமென்ற திட்டம் டி காலும் சர்ச்சிலும் சேர்ந்து உருப்படுத்தியதுதான். இரண்டாவது தட வையாக டி கால் லண்டனிலிருந்து திரும்பியபோது அந்தத் திட்டத்தைத்தான் கொண்டுவந்தார்.

ஆனுல் பரிதாபம்! அவர் சந்தோஷமாக பிரான் ஸுக்குள் நுழைந்ததும், அங்கு நாஜி-பிரெஞ்சு சரணு கதி ஒப்பந்தம் அவதாரமெடுத்திருந்தது. அந்த விரூபக் காட்சி டி காலுக்குப் பிடிக்கவில்லை. அவர் நிலைமை யைப் பரிசீலனை செய்து பார்த்தார். சர்க்கார் ஒரே யடியாகப் பணிந்துவிட முனைந்துவிட்டதென்பதும் தாம் எது சொன்னுலும் ஏருதென்பதும் புரிந்தது. உடனே யாதும் சொல்லாது லண்டனுக்குப் பறந்து சென்ருர். சென்றதும் பிரெஞ்சு மக்களுக்கு ஓர் அறிக்கை விடுத்து, தாம் **சுதந்திர பிரெஞ்சு இயக்கம்** ஒன்றை ஆரம்பித்திருப்பதாக ரேடியோ மூலம்

விளக்கினர். கீழேயுள்ள அப்பிரசங்கத்தின் ஒரு பகுதியை யாவரும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம் :

'தற்போது பிரான்ஸ் எய்தியிருக்கும் தோல்வி முடிவானதா? இல்லை. இல்லை என்று முழுநம்பிக்கையுடன் கூறுகின்றேன். பிரான்ஸ் வீழ்ந்து விடவில்லை என்பதை மனப்பூர்வமாகச் சொல்லுகிறேன். பிரான்ஸ் தனிப்பட்ட ஒரு நாடல்ல. அதனோடு சம்பந்தப்பட்ட பெரிய சாம்ராஜ்யம் ஒன்றிருக்கிறது. அந்த பிரெஞ்சு சாம்ராஜ்யம் பிரிட்டனோடு சேர்ந்துகொண்டு யுத்தம் நடத்தலாம். பிரிட்டனின் கடல் ஆதிக்கம் இன்னும் தளரவில்லை. பிரிட்டிஷார் வெற்றிகரமாகப் போர்புரிந்து வருகிறார்கள். அவர்களோடு சேர்ந்து நம் சுதந்திரத்தைக் காப்பாற்றுவோம். அதற்காக எல்லா பிரெஞ்சுத் தலைவர்களும் முன்வர வேண்டும். பிரெஞ்சு மக்களும் ஒன்று சேரவேண்டும். ஆயுதத் தொழிற்சாலைகளில் பழக்கமுள்ள பொறிவலாளர்களையும் தொழிலாளிகளையும் பரிந்து அழைக்கிறேன். சுயேச்சை விரும்பும் பிரெஞ்சு மக்கள் அனைவரும் என்னோடு கடிதப் போக்குவரத்துச் செய்க! எக்காரணத்தாலும் பிரெஞ்சு சுதந்திரப் போர் தாழ்வடையக் கூடாது. அனைவரும் எழுந்து முன்வருக!'

இந்தப் பிரசங்கம் செய்த நாள் முதல் டி கால் லண்டன் செய்மூர் பிளேஸ் என்ற இடத்தைத் தம் தலைமை நிலையமாக வைத்துக்கொண்டு கிளர்ச்சி செய்து வருகிறார். நாளடைவில் பல பிரெஞ்சுத் தலைவர்களும், கப்பல்காரர்களும், விமானிகளும், போர்வீரர்களும், உத்தியோகஸ்தர்களும் அவருடன் சேர்ந்து வருகிறார்கள். இன்று சுயேச்சை பிரெஞ்சுக் கடற்

படை, விமானப் படை, தரைப் படையெல்லாம் அவரிடம் இருக்கின்றன.

இதனைப் பார்த்தால் பெட்டெய்னுக்கு எப்படி யிருக்கும்? அவர் டி காலைத் தேசத் துரோகியாக மதித்து, அவருக்குத் தூக்குத் தண்டனை விதித்திருக் கிறார். இந்த மரண தண்டனை பெற்றவரை ஏன் பெட்டெய்ன் அழிக்க முயலவில்லை என்பதற்கு அவர் எழுதிய ஒரு பத்திரிகைக் கட்டுரையில் இவ்வாறு காரணம் கூறப்படுகிறது:

'டி காலை நாஜி யுதவியோடு அழித்து விடமுடியும். ஆனால் ஒரு தடை. நாஜியர் உதவியை நாங்கள் நாடினால் பிரிட்டிஷ் சர்க்காரின் பகைவர்களாகி விடுவோம். அப்படி யானால் பிரிட்டிஷ் விமானங்கள் எங்கள் அருமையான பாரிஸ் நகரை விட்டுவையா. அங்குள்ள கலைப் பொக்கிஷங்கள் எங்கள் உயிரைவிடப் பெரியனவாகும்.'



பிரிட்டிஷ் பிரதம மந்திரி
வின்ஸ்டன் சர்ச்சில்

4. பெட்டெய்ன் - டி கால் போட்டி

ஜன்மப் பகைவர்களாகிவிட்ட பெட்டெய்னும் டி காலும் பிரெஞ்சு சாம்ராஜ்யத்தில் இரண்டு இடங்களில் நின்று போட்டி போடுவதுடன் இருவரும் தத்தம் பலத்தைப் பெருக்கிக் கொள்ளவும் பாடுபடுகிருர்கள். 1940 டிசம்பர் மாதத்தில் 'நியூஸ் ரிவ்யூ' என்ற பத்திரிகை வெளியிட்ட ஒரு கணக்கின்படி பிரெஞ்சு சாம்ராஜ்யத்தின் ஐந்தில் இரண்டு பாகம் டி கால் கைக்கு வந்து விட்டதாகத் தெரிகிறது. ஆப்பிரிகாவில் மட்டிலும் 3 கோடிப் பிரஜைகள் பெட்டெய்ன் கீழிருப்பதாகவும், 70-லட்சம் பேர் டி காலுடன் சேர்ந்திருப்பதாகவும் அறியக்கிடக்கிறது. இந்தப் பெருந் தொகையினரைத் தவிர, பல பிரெஞ்சு பிரமுகர்களும் டி காலுடன் சேர்ந்திருக்கிருர்கள். நம் இந்தியாவிலிருக்கும் பிரெஞ்சுப் பிரதேசத்தின் கவர்னரான போர்ன்வேன் டி காலுடன் சேர்ந்திருப்பது பலருக்கும் தெரிந்திருக்கும். புதிய ஹெப்ரிடிஸ் என்ற தீவுகளின் கவர்னராகிய ஹென்ரி செளடாடும் சேர்ந்திருக்கிருர். 1940 ஆகஸ்ட் 26-ந்தேதி சாட் என்ற ஆப்பிரிக்கப் பிரதேசம் டி காலுடன் சேர்ந்தது. அடுத்த நாள் காமரூன் என்ற குடியேற்றநாடு ஐக்கியமாயிற்று. அதனைப் பின்தொடர்ந்து வந்தன தாஹிதி முதலிய பிரதேசங்கள். தென்கடல் தீவு என்பது கீழ்க்கோடி

யில் இருக்கும் ஒரு தீவுக்கூட்டம். அதுவும் டி கால் கொடியையே தாங்கியிருக்கிறது. புதிய காலிடோனியா என்ற தீவும் அவ்விதமே வழிப்பட்டிருக்கிறது.

இங்ஙனம் காலனிகளும் அவற்றின் அதிகாரிகளும் டி காலுடன் சேர்வதைவிட ஜார்ஜ் காட்ரோ என்பவர் முன்வந்ததுதான் குறிப்பிடத் தகுந்த சம்பவம். ஸ்ரீ. காட்ரோ பிரெஞ்சு கவர்னர்களுக்குள் மிகவும் செல்வாக்கு வாய்ந்தவர்; அதிக வயதானவர்; அரசியல் ஞானத்தில் முதிர்ந்தவர்; டி காலுக்குக் கிட்டத் தட்டக் குருவாயிருக்க லாயக்கானவர். இவர் 1877-ல் செய்டா என்ற அல்ஜீரிய நகரத்தில் பிறந்தார். சென்ற மகா யுத்தத்தில் ஒரு பிரெஞ்சுச் சேனையின் காப்டனுயிருந்து அருந்தொண்டாற்றினுர். அதன் பயனுக யுத்த முடிவில் மேஜர் பதவியும், அப்பால் ஸிரியாவில் ஓர் உயர்ந்த உத்தியோகமும் அவருக்கு அளிக்கப்பட்டன. அராபிய இரகசிய இலாகாவைத் தோற்றுவித்தது அப்போதுதான். 1939-ல் இவர் ஆப்பிரிக்க 'ரிப்' இயக்கத்தில் காண்பித்த மதிநுட்பத்திற்காகப் பிரதம மந்திரி மாண்டல் இவரைக் கௌரவிக்கும் முறையில் இந்தோ - சீனு கவர்னரா யனுப்பினுர். 1940 வரையிலும் காட்ரோ கவர்னர் பதவியை மிகத் திறமையாக நிர்வகித்து வந்தார். ஜூன் மாதத்தில் ஜெர்மனியும் பிரான்ஸூம் சமாதான ஒப்பந்தம் செய்துகொண்டதும் அவர் பெட்டெய்ன்மீது வெறுப்புக் கொள்ளலானுர். அதே போல அவருடைய சுற்றத்தார்களும் வெறுப்புக் கொண்டார்கள். காட்ரோவின் புதல்வர் 'கலகக்

கார' டி காலுடன் சேர்ந்துகொண்டார். அந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட விச்சி சர்வாதிகாரி காட்ரோவைத் தாய்நாடு திரும்புமாறு பணித்து விட்டு, தற்போதைய கவர்னராயிருக்கும் டிகோவைப் பதிலுக்கு அனுப்பினுர். நாடு திரும்பும்படி வந்த உத்தரவில் காட்ரோ கடமையாற்றத் தவறிஞ ரென்றும், அதனே முன்னிட்டே திரும்பி யழைக் கப்படுகிருரென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த உத்தரவுக்காகச் சொல்லொணுத வருத்தம் கொண் டார் காட்ரோ. எனவே அவர் நேராக விச்சி சென்று வீழ்வதற்குப் பதிலாக லண்டன் சென்று சுதந்திர டி காலுடன் ஐக்கியமானுர். பிரெஞ்சு காலனிகளில் மிகப் பெரிதாகிய இந்தோ - சீனுவில் கவர்னரா யிருந்தாரென்ற முறையில் காட் ரோவுக்கு ஏராளமான செல்வாக்குண்டு. சுதந்திர பிரான்ஸில் டி கால் ஒருகால் முதன்மந்திரியானுல் யுத்த மந்திரிப் பதவி தாங்குபவர் ஸ்ரீ. காட்ரோ வாகவே இருப்பார்.

மேலே டி காலுடன் சேர்ந்திருக்கும் காலனி களேத் தொகுத்துக் கூறினேம். அவ்விதமே பெட் டெய்னுடன் இருக்கும் காலனிகளேக் கோத்துத் தருவ தும் அவசியம். மொராக்கோ, பிரெஞ்சு மேற்கு ஆப்பிரிகா, ஸிரியா, ஸோமாலிலாந்து, மடகாஸ்கர், இந்தோ - சீனு, ஸெயிண்டுபீயர், மார்டினிக், குவாட லோப், பிரெஞ்சு கினியா — இவைகள்தாம் பெட் டெய்னின் காலனிகள்.

இக்காலனிகளில் முக்கியத்துவம் வாய்ந்தது பிரெஞ்சு மொராக்கோ. இது மகமத் என்ற ஒரு சுல்தானின் கீழிருக்கிறது. இந்த சுல்தான் விச்சி சர்க்காரிடம் மிகுந்த விசுவாசமா யிருப்பவர்.

இவரைப் போல் விச்சிப் பற்றுடைய மற்ருேர் அரசர் சீதி அகமத் பே என்பவர். இவர் டுனீஷியாவின் அதிபதி. டுனீஷியாவில் 80,000 இதாலியரும், ஒரு லட்சம் பிரெஞ்சுக்காரர்களும், ஏராளமான சுதேசிகளும் இருக்கின்றனர். முஸொலீனிக்கு இந்த டுனீஷியா மீது பெரிய நாட்டம். லிபியாவில் தோல்வி யுற்று வரும் முஸொலீனியின் சேனைக்கு ஒதுக்கிடம் அளிக்க டுனீஷியா ரொம்பத் தேவையாகும். இதற்காகவேதான் பெட்டெய்னும் பிராங்கோவும், முஸொலீனியும் மாறி மாறிப் பேசிவருகிருர்கள் என்று சொல்லப்படுகிறது.

டுனீஷியா நீங்கினுல் அடுத்தபடியாக இருக்கும் மற்ருெரு பெரிய பிரெஞ்சுக் காலனி அல்ஜீரியா. இது 680 மைல் நீளமுள்ள கடற்கரையைக் கொண்டது. சஹாரா பாலைவனப் பிரதேசத்துக்கு வேண்டிய பொருள் முழுதும் இந்த நாடு வழியாகத்தான் போகிறது. இதன் கவர்னர் ஜியார்ஜஸ் லெ பீன். அவர் நாஜியருக்குக் கீழ்ப்பட்டிருப்பதை விரும்பவில்லை; ஆனுலும் விச்சி சர்க்காரிடம் விசுவாசமாயிருக்க விரும்புகிருர்.

ஸிரியா மற்ருெரு பிரெஞ்சுக் காலனி. இதன்மீது இத்தாலியர் நாட்டம் பதிந்திருக்கிறதென்ற முறையி

லும் அண்மியிருக்கும் நாடு பிரிட்டிஷ் ஆதிக்கத்திற் குட்பட்ட தென்ற முறையிலும் இந்நாள் ஸிரியா வுக்கு நல்ல பெயர் வாய்ந்திருக்கிறது. இதன் கவர் னர் **யூஜின் மிட்டில் ஹாஸர்.** அவர் பெட்டெய்ன் சரணுகதியைக் கண்டதும் விசுவ ரூபமெடுத்தார். டி காலுடன் சேர்ந்து கிளர்ச்சி ஆரம்பிப்பார் என்று அனைவரும் கருதினர். ஆனல் நல்ல வேளையில் வேகாண்ட் பறந்து சென்ருர். வேகாண்டுக்கு ஸிரி யாவில் அமோகமான செல்வாக்கு உண்டு. அவரைப் பார்த்ததும் ஹாஸரின் கோபம் தணிந்தது.

இவ்விதமே மொராக்கோவின் கவர்னராகிய ஜெனரல் அகஸ்டி நோகூ என்பவரும் நாஜிகள் கொடு மை கண்டு கோபித்து எழுந்தார். அவ்வெழுச்சியை ஊக்கிவிடப் பார்த்தார் டி கால். ஆனல் அங்கும் சென்றிருக்கிருர் வேகாண்ட். வேகாண்டின் பிர யாணம் மொராக்கோவுடன் மட்டிலும் நிற்கவில்லை, மேற்கு ஆப்பிரிக்கக் காலனிகள் முழுவதையும் அவர் தம் கைக்கீழ் அடக்கி வைத்திருக்கிருர். இந்நாள் டி கால் ஆதிக்கத்தின்கீழ் ஆப்பிரிக்கக் காலனிகள் முழுதும் வராததற்குக் காரணமா யிருப்பவர் வேகாண்ட் ஒருவரே.

5. டாக்கார் முற்றுகை

லண்டனில் இருந்துகொண்டே பிரெஞ்சுக் காலனிகள் அனைத்தையும் தம் வழிக்குத் திருப்பிக் கொள்வதோடு படை தாங்கிச் சென்றும் சிலவற்றைக் கவர்ந்துகொள்ள வேண்டுமென்று கருதினார் டி கால். அதற்குச் சில ஆப்பிரிக்க நண்பர்கள் உபதேசகர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் எழுதிய ஒரு கடிதத்தில், 'தலைவரே, தாங்கள் டாக்கார் துறைமுகத்தண்டை தோன்றினாலே போதும் - ஆப்பிரிக்கக் காலனிகள் எதிர்கொண்டழைத்துத் தங்கள் பாதங்களில் விழக் காத்திருக்கின்றன' என்று பொறித்திருந்தார்கள். பாவம், இதனை டி கால் மனப்பூர்வமாக நம்பினார். நம்பிக்கொண்டு ஒரு சிறிய பிரிட்டிஷ் கடற்படையோடு டாக்காருக்குச் சென்றார்.

இந்தப் படையெடுப்பு ஒற்றர் ஸ்தாபனத்தில் ஓங்கிய புகழ்கொண்ட ஜெர்மானியருக்கு அதிசீக்கிரத்தில் தெரிந்துவிட்டது. எனவே அவர்கள் விச்சி சர்க்காருக்குத் தகவல் கொடுக்க, விச்சி அதிகாரிகள் தந்திரமாக ஒரு கடற்படையை அனுப்பிவைத்தார்கள். 7,600 டன் எடையுள்ள மூன்று குரூய்ஸர்களும் 2,560டன் எடையுள்ள மூன்று நாசகாரிகளும் அக் கடற்படையில் உறுப்பாயிருந்தன. இக்கப்பல்கள்

அதுகாறும் இருந்த இடம் மத்தியதரைக்கடல். அங்கிருந்து டாக்காரை அடையவேண்டுமானுல் ஜிப்ரால்டரைக் கடந்தாகவேண்டும். ஜிப்ரால்டர் பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இருப்பது. பிரிட்டனுடன் சேர்ந்த டி காலுடன் சண்டை செய்வதற்காக வரும் பிரெஞ்சுப் படையை விடுவார்களா பிரிட்டிஷார்? இதற்காக பிரெஞ்சு கடற்படைத் தலைவர் ஸ்ரீ டார்லான் (தற்போது வெளிநாட்டு மந்திரி) ஒரு தந்திரம் செய்தார். தம் கடற்படை மத்தியதரைக் கடலில் கிடந்தால் ஜெர்மானியர் பிடித்துக்கொள்ள வழியுண்டென்றும், இரகசியமாக காஸாபிளாங்காவுக்குச் சென்றுவிட்டால் அபாயம் நீங்கிவிடுமென்றும் ஜிப்ரால்டர் அதிகாரிகளிடம் தெரிவித்தார். அவர்களுக்கு நாஜியரை ஏமாற்றுவதென்ருல் சம்மதம்தானன்ரோ? சுளுவாக டார்லானுக்கு அநுமதி கிடைத்துவிட்டது. உடனே பிரெஞ்சுப் படை மெல்ல ஜிப்ரால்டரைக் கடந்து சென்றது. சென்றதும், காஸாபிளாங்காவை நாடுவதற்குப் பதிலாக, அது நேராக டாக்காரை எட்டியது. கிட்டத்தட்ட இந்த வேளையில்தான் டி கால் சேனையும் அங்கு வந்தது.

டி கால் வரும்போதே தமக்கு மாலையிட்டு வரவேற்பு நடத்தப்படும் என்றல்லவா நினைத்துக் கொண்டிருந்தார்? ஆகவே டாக்கார் அருகே தோன்றியதும் தம் பிரதிநிதி ஒருவரை கவர்னரான **டி பாய்ஸன்** என்பவரிடம் அனுப்பி, தமக்குப் பணிந்துவிடுமாறு வேண்டினுர். பாய்ஸன் சில வாரங்களுக்கு முன்பு

தான் பெட்டெய்னுல் கவர்னராக நியமிக்கப்பட்டிருந்தார். அவருக்குப் பெட்டெய்னின் யுத்த உத்தரவும் கிடைத்திருந்தது. எனவே, அவர் டி காலுக்குத் துப்பாக்கிக் குண்டு மூலம் வரவேற்பு வழங்கலானுர். மேற்சொன்ன பிரெஞ்சுக் கடற்படையும், கரையிலுள்ள பீரங்கிகளும்கூட நண்பகல் முதல் வரவேற்புக் குண்டுமாரி பொழியத் தொடங்கின. இதனுல் டி கால் திகைத்திருக்கலாம்.

மாலே வரையிலும் இரு படைகளும் யுத்தம் செய்த பிறகு மூடுபனி படர்ந்தது. அதனுல் கப்பல்கள் நின்றவிடம் தெரியவில்லே. எனவே துப்பாக்கிப் பிரயோகம் தடைப்பட்டது.

இத்தருணத்தில் டி கால் தம் படையெடுப்பை நிறுத்திவிட்டுத் திரும்பிப் போனுர் என்று சொல்லப்படுகிறது. ஆயினும் அவரது குண்டு வீச்சினுல் சில ஊர்கள் அழிந்தன என்றும், கவர்னர் மாளிகையொன்று தகர்ந்தது என்றும், ஒரு ரயில்வே சந்திப்பும், வாக்காம் என்ற விமான நிலேயமும் பாழ்பட்டன என்றும், 60 பிரஜைகள் மாண்டனர் என்றும் விச்சி ரேடியோ ஒலி பரப்பியது. இதற்குமுன்னுடியே டி கால் தம்முடைய வீரர்களிடம் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டாமென்று கூறிவிட்டாராம். தம் ஜனங்களே ஒருவருக்கொருவர் சுட்டுக்கொள்வது தேசாபிமானமோ தேசவிடுதலேயோ ஆகாதென்று அந்தப் பெருந்தகை கண்டித்தாராம்.

இந்தப் படையெடுப்பின் முடிவுபற்றி பிரிட்டனில் கொஞ்சம் பரபரப்பு ஏற்பட்டது. சிறிது கசப்

பும் பரவியது. சிலர் டி காலேயும் சிலர் அவருக்கு உடந்தையா யிருந்த பிரிட்டிஷ் பிரமுகர்களேயும் குறை கூறினர்கள். ஆனல் உண்மை வேறுவிதமாக இருந்தது. டி கால் யாரோ சில ஆப்பிரிக்க அபிமானிகள் கொடுத்த வாக்குறுதியைக் கேட்டுஏமாந்து போனதே அத்தோல்வியாகும். அந்த உண்மை நாட்டில் பரவவே கொந்தளிப்பு சிக்கிரம் அடங்கியது. அதோடு பிரதம மந்திரி சர்ச்சிலும் ஓர் உறுதி கூறினர். நிற்க,

மேற்படி டாக்கார் படையெடுப்பு தற்காலிகமாக டி கால் அபஜயத்தைக் குறித்து நின்ருலும், பின்னர் நடந்த சம்பவங்களால் அவர் புகழ் மாயவில்லே. பல காலனிகள் அவர் கொடியின் கீழ் வந்திருக்கின்றன. பல பிரமுகர்களும் அவர் கட்சியை நாடுகிருர்கள். அவர்களுடைய ஊழியமும் ஒத்துழைப்பும் முடிவான வெற்றியைக் கொண்டுவரும் தருணம் இன்னும் வரவில்லே. ஆனல் ஒரு விஷயம் மட்டும் சுதந்திர ஆசையுள்ள உலக மக்களுக்கு ஆறுதலளித்து வரும் என்பது நிச்சயம். ஆதிக் குடியரசை ஸ்தாபித்த வீர நிலமான பிரான்ஸ் இன்று அந்நியருக்கு அடிமைப்பட்டுக் கிடந்தபோதிலும், அந்நாட்டின் சுதந்திர ஜோதியைப் பூரணமாக அவிந்துவிடாமல் ஏந்தி நிற்பவர் தளகர்த்தர் டி கால் என்பதே அவ்விஷயம்.

மாடல் அச்சுக்கூடம், சென்னே.

நவயுகப் புஸ்தகங்கள்

		ரூ.	அ.
1.	புதுமைப்பித்தன் கதைகள் (பரிசுப் பதிப்பு)	2	12
	ஷை (கலிகா-ராப்பர்)	2	0
2.	பெண்	1	12
3.	கிரஹதாகம் I	1	12
	ஷை (பாகம் II)	1	12
4.	சுகம் எங்கே?	1	12
5.	அன்னா	1	12
6.	ரஜபுத்திர ஆதிக்கத்தின் அஸ்தமனம்	1	12
7.	மகாராஷ்டிர ஜீவன் உதயம்	1	12
* 8.	கம்பன் கவிதை	1	8
9.	கட்டபொம்மு	1	8
10.	வின்ஸ்டன் சர்ச்சில்	1	8
11.	பேஸிஸ்ட் ஜடாமுனி	1	8
12.	நடைச் சித்திரம்	1	8
13.	மழையும் புயலும்	1	8
14.	மேனாட்டு ஞான மலர்கள்	1	8
15.	தேவதாஸ்	1	0
16.	உலகத்துச் சிறு கதைகள்	1	0
17.	பாகிஸ்தான்	1	0
18.	வெற்றி யாருக்கு?	0	12
19.	ஆங்கிலக் கவிதை மலர்கள்	1	0
	ஷை ரெக்ஸைன் பதிப்பு	1	8
20.	கோயரிங்	0	12
21.	மாகாண சுயாட்சி	0	8
22.	தேய்ந்த கனவு	0	8
*23.	சீனா-ஜப்பான்	0	8
*24.	மைக்கேல் காலின்ஸ்	0	8
25.	எல்லோரும் ஓர் குலம்	0	8
26.	வார்தா திட்டம்	0	8
*27.	இரட்டை மனிதன்	0	8
28.	பொம்மையா மனைவியா?	0	8
*29.	கப்சிப் தர்பார்	0	8
30.	லெனின்	0	8
31.	ஸப்த நதிகள்	0	8
32.	மேஹர் உன்னிஸா	0	8
33.	திரிபுரி காங்கிரஸ்	0	6
34.	அடிவானத்துக்கு அப்பால்	0	6
35.	நாம் எங்கிருக்கிறோம்?	0	4
36.	மதனி	0	4
37.	ஆறு கதைகள்	0	4
38.	விவாகமானவர்களுக்கு ஒரு யோசனை	0	4
39.	தளபதி டிகால்	0	4
40.	சைவ உணவு எது?	0	4
41.	அடிமைத் தாய்	0	3
42.	பக்த குசேலா	0	3
43.	நாசகாரக் கும்பல்	0	3
44	வ. ரா. சரிதம்	0	2
45	மந்தரை சூழ்ச்சி	0	2
46	ஆர்க்கிமிடீஸ்	0	2
47.	சுகாதாரச் சட்ட விளக்கம்	0	1

* இக்குறியிட்ட புஸ்தகங்கள் செலவாகிவிட்டன.

நவயுகப் பிரசுராலயம் லிமிடெட், ஜி. டி., சென்னை.